# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
# MIDDLE SECTIONS
# MID TERM WORKSHEET – 2023-24

**SUB – TAMIL** **CLASS – VI**

## செய்யுள் - அன்னைத்தமிழே!

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. அன்னை + தமிழே - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

    அ) அன்னந்தமிழே ஆ) அன்னைத்தமிழே

    இ) அன்னத்தமிழே ஈ) அன்னைதமிழே

2. பிறப்பெடுத்தேன் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

    அ) பிறப் + பெடுத்தேன் ஆ) பிறப்பு + எடுத்தேன்

    இ) பிறப் + எடுத்தேன் ஈ) பிறப்ப + எடுத்தேன்

3. சிறப்படைந்தேன் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

    அ) சிறப்பு + அடைந்தேன் ஆ) சிறப் + அடைந்தேன்

    இ) சிற + படைந்தேன் ஈ) சிறப்ப + அடைந்தேன்

4. என்னில் - என்ற சொல்லின் பொருள் _________.

    அ) உனக்குள் ஆ) நமக்குள் இ) உலகுக்குள் ஈ) எனக்குள்

5. மறந்துன்னை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) மறந்து + துன்னை ஆ) மறந் + துன்னை இ) மறந்து + உன்னை ஈ) மறந் + உன்னை

**ஆ) விடை தருக.**

6. பின்வரும் சொல்லின் பொருள் தருக.

    ஆவி = ___________

7. பின்வரும் சொல்லின் எதிர்ச் சொல் தருக.

    புகழ் x ____________

**இ) விடை தருக.**

8. ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார் ?

9. எதைச் சொல்ல முடியவில்லை என்று நா.காமராசன் குறிப்பிடுகிறார் ?

10. அன்னைத் தமிழே - பாடலில் இடம்பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

**ஈ) அடி பிறழாமல் எழுதுக.**

10. அன்னைத் தமிழே எனத் தொடங்கி முடியலையே வரை.

## செய்யுள் - வெற்றி வேற்கை - சான்றோர் மொழி

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. ஆல் இச்சொல்லின் பொருள் _________.

அ) வேலமரம் ஆ) ஆலமரம் இ) அரசமரம் ஈ) வேப்பமரம்

2. பெரும்படை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) பெருமை + படை ஆ) பெரும் + படை

இ) பெரு + படை ஈ) பெரிய + படை

3. சிறப்படைந்தேன் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) சிறப்பு + அடைந்தேன் ஆ) சிறப் + அடைந்தேன்

இ) சிற + படைந்தேன் ஈ) சிறப்ப + அடைந்தேன்

4. கயம் இச்சொல்லின் பொருள் _________.

அ) நீர்நிலை ஆ) பயம் இ) வானிலை ஈ) பருவநிலை

**ஆ) பொருத்தமான நிறுத்தக்குறி இடுக.**

5. நான் என்ன வேலை செய்ய வேண்டும்

6. காய்கறிக்கடையில் வேண்டிய தக்காளி கத்தரி புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன்

**இ) பின்வரும் சொற்களைக் கொண்டு இரு பொருள் தரும் வாக்கியங்கள் அமைக்க.**

7. ஆறு ____________________________, ______________________________

8. மாலை ____________________________, ______________________________

**ஈ) விடை தருக.**

9. ஆல மரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை ?

10. வெற்றி வேற்கைப் பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது ?

**உ) அடி பிறழாமல் எழுதுக.**

9. 'தெள்ளிய' எனத் தொடங்கி நிழலாகும்மே வரை.

## செய்யுள்- நன்னெறி

**அ. பொருள் தருக.**

1. இன்சொல் -

2. வன்சொல் -

3. அழல்கதிர் -

4. தண்ணென் கதிர் -

5. இருநீர் -

6. அதிர்கின்ற -

**ஆ. பிரித்தெழுதுக.**

7. வியனுலகம் -

8. இன்சொல் -

9. வன்சொல் -

**இ. நிரப்புக.**

10. நன்னெறியின் ஆசிரியர் _______________

11. நன்னெறியில் ___________ நேரிசை வெண்பாக்கள் உள்ளன.

**ஈ. விடை தருக.**

12. உலகம் எப்போது மகிழும் என்று நன்னெறி கூறுகிறது ?

13. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும் ?

**உ. அடி பிறழாமல் எழுதுக.**

‘**இன்சொலால்**’ எனத் தொடங்கும் நன்னெறிப் பாடலை எழுதுக.

## உரைநடை - பனைமரச் சிறப்பு

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. கரையோரம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) கரை + ஓரம் ஆ) கரை + யோரம் இ) கரைய + ஓரம் ஈ) கர + ஓரம்

2. வல்லமை - என்ற சொல்லின் பொருள் _________.

அ) வலிமை ஆ) எளிமை இ) இனிமை ஈ) புதுமை

3. விழுந்து - என்ற சொல்லின் எதிர்ச் சொல் _________.

அ) நடந்து ஆ) பறந்து இ) எழுந்து ஈ) நின்று

**ஆ) பிரித்து எழுதுக.**

4. சாலையோரம் = ___________

5. குருத்தோலை = ___________

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. ___________ பனை மரத்தில் காய்த்துப் பழுக்கும்.

7. பண்டைய இலக்கியங்கள் பற்றித் தெரிந்து கொள்ள உதவியது __________

8. ___________ நம் தமிழ்நாட்டின் மாநில பறவையாகும்.

9. பனைமரம் __________ தாங்கும் வலிமை பெற்றது.

10. தமிழ்நாட்டின் மாநில மலர் ______________

11. நீராரும் கடலுடுத்த என்பது ________________

12. தமிழ் நாட்டின் மாநில விலங்கு ________________

**ஈ ) பொருத்துக.**

13. ஆ - காடு

14. கை - பசு

15. பூ - கரம்

16. கா - மலர்

**உ) ஒரே பொருள் தரும் வேறு சொற்கள் தருக.**

17. நிலவு - _____________, ________________

18. திரள் - _____________, ________________

**ஊ) விடை தருக.**

19. பனைமரம் கற்பகத்தரு என்று ஏன் அழைக்கப்படுகிறது ?

20. பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம் ?

21. பனைமரத்தைச் சார்ந்து வாழும் பறவைகள் யாவை ?

22. பனை ஓலைகள் எவ்வாறு பயன்படுகின்றது ?

## உரைநடை - கரிகாலன் கட்டிய கல்லணை

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. நீர் + பாசனம் - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) நீர்பாசனம் ஆ) நீர்ப்பாசனம் இ) நீரப்பசனம் ஈ) நீரபாசனம்

2. அமைந்துள்ளது - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) அமைந் + துள்ளது ஆ) அமைந்து + உள்ளது
இ) அமைந்து + ள்ளது ஈ) அமைந் + உள்ளுத

3. பெருவெள்ளம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

அ) பெருமை + வெள்ளம் ஆ) பெரு + வெள்ளம்

இ) பெரு + வுள்ளம் ஈ) பெரிய + வெள்ளம்

4. அரசு+ஆட்சி - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) அரசஆட்சி ஆ) அரசாட்சி இ) அரசுசாட்சி ஈ) அரசுஆட்சி

**ஆ) பொருள் தருக.**

4. வியத்தகு = ___________

5. சூழ்ச்சி = ___________

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு ____________.

7. கல்லணை அமைந்துள்ள மாவட்டம் ____________.

8. கல்லணை ______________ நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**ஈ ) எதிர்ச்சொல் எழுதுக.**

9. அடித்தளம் x _____________

10. பழைமை x ___________

11. தொலைவில் x ___________

**உ) விடை தருக.**

12. தமிழ் நாட்டிலுள்ள முக்கிய அணைகள் யாவை ?

13. கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது ?

## இலக்கணம் - தமிழ் எழுத்துகள், மாத்திரை, சொல்

**அ) பொருத்தமான சான்றினைத் தோந்தெடுத்து எழுதுக.**

1. **தனிநிலை இடம்பெறும் சொல்**

   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) இரும்பு ஈ) எ∴கு

2. **உரிச்சொல்**

   அ) உறுமீன் ஆ) செம்மீன் இ) வாளைமீன் ஈ) கெண்டைமீன்

3. **நான்கு மாத்திரை கால அளவில் ஒலிக்கும் சொல்**

அ) ஔவை ஆ) தேவதை இ) பன்னீர் ஈ) தண்ணீர்

**ஆ) பொருத்தமான விடையைத் தோந்தெடுத்து நிரப்புக.**

**4. உயிர் நெடில்கள் மெய்யெழுத்துடன் இணைந்தால் ____________ எனப்படும்.**

அ) இடையினம் ஆ) உயிர்நெடில் இ) நெட்டெழுத்துகள் ஈ) தனிநிலை

**5. பெயரையும், வினையையும் சார்ந்து அவற்றின் தன்மையை விளக்குவது ___________.**

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

**6. எழுத்துகளை ஒலிக்கும் கால அளவிற்கு ___________ என்று பெயர்.**

அ) குறில் ஆ) வல்லினம் இ) மாத்திரை ஈ) சொல்

**இ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்து நிரப்புக.**

**7. உயிர்மெய் எழுத்துகள் ( எண்ணிக்கையைக் கூறு )**

அ) 237 ஆ) 218 இ) 216 ஈ) 247

**8. ஆலயம் தொழுவது சாலவும் நன்று ( உரிச்சொல்லினைத் தேர்ந்தெடுத்து எழுதுக )**

அ) ஆலயம் ஆ ) நன்று இ) தொழுவது ஈ) சாலவும்

.

**9. பாண்டவர் ( மாத்திரை கூறு )**

அ) ஐந்து ஆ) எட்டு இ) ஆறு ஈ) ஏழு

**ஈ) பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**10. களிறு**

அ) உயிர் எழுத்துகள் இடம்பெற்றுள்ள சொல்

ஆ) மெய்யெழுத்துகள் இடம்பெற்றுள்ள சொல்

இ) உயிர்மெய் எழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ள சொல்

ஈ) ஆய்த எழுத்து இடம்பெற்றுள்ள சொல்

11. மாதவன்

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

12. தாத்தா

அ) ஈரெழுத்துச்சொல் ஆ) மூவெழுத்துச்சொல்

இ) நான்கெழுத்துச்சொல் ஈ) வினைச்சொல்

**உ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

13. அ) தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.
ஆ) தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்.
இ) தமிழ் இலக்கணம் நான்கு வகைப்படும்.
ஈ) தமிழ் இலக்கணம் பத்து வகைப்படும்.

14. அ) ஐ, கு, ஆல் என்பன இடைச்சொல் ஆகும்.
ஆ) ஐ, கு, ஆல் என்பன உரிச்சொல் ஆகும்.
இ) ஐ, கு, ஆல் என்பன வினைச்சொல் ஆகும்.
ஈ) ஐ, கு, ஆல் என்பன வல்லினம் ஆகும்.

15. அ) கண் இமைக்க எடுத்துக் கொள்ளும் கால அளவு கால் மாத்திரை ஆகும்.
ஆ) கண் இமைக்க எடுத்துக் கொள்ளும் கால அளவு அரை மாத்திரை ஆகும்.
இ) கண் இமைக்க எடுத்துக் கொள்ளும் கால அளவு ஒரு மாத்திரை ஆகும்.
ஈ) கண் இமைக்க எடுத்துக் கொள்ளும் கால அளவு இரண்டு மாத்திரை ஆகும்.

## இலக்கணம் - திணை, பால், எண், இடம்

**அ) பொருத்தமான சான்றினைத் தோந்தெடுத்து எழுதுக.**

1. **உயர்திணை**

அ) நரகர் ஆ) நாற்காலி இ) நிலம் ஈ) பசு

2. **பலவின்பால்**

அ) ஆசிரியர் ஆ) குழந்தைகள் இ) மரம் ஈ) குதிரைகள்

3 **உயர்திணையில் பன்மைக்குரிய பால்**

அ) ஆண்கள் ஆ) மாடுகள் இ) நாவரசன் ஈ) யானை

**ஆ) பொருத்தமான விடையைத் தோந்தெடுத்து நிரப்புக.**

4. **உயர்வு அல்லாத ஒழுக்கம் உடையவை ____________ என்று அழைக்கப்படும்.**

அ) தன்னிலை ஆ) ஒன்றன்பால் இ) உயர்திணை ஈ) அ.்.றிணை

5. **உயர்திணையில் ஓர் பெண்ணைக் குறிக்கும் பெயர் ___________.**

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலர்பால் ஈ) ஒன்றன்பால்

6. **___________ இரண்டு வகைப்படும்.**

அ) இடம் ஆ) திணை இ) பால் ஈ) சொல்

**இ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்து நிரப்புக.**

7. **உங்கள் ( தன்மை இடம் ஆக்குக )**

அ) நான் ஆ) எங்கள் இ) நீ ஈ) அவர்கள்

8. **மாணவன் ( பலர்பால் ஆக்குக )**

அ) மாணவர்கள் ஆ ) மாணவி இ) மாணவிகள் ஈ) கற்பவன்

.

9. **தந்தை ( பெண்பால் ஆக்குக )**

அ) தமக்கை ஆ) தங்கை இ) தாய் ஈ) சேய்

**ஈ) பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

10. **மகளிர்**

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலர்பால் ஈ) பலவின்பால்

11. **அது**

அ) தன்மை ஆ) முன்னிலை இ) படர்க்கை ஈ) பன்மை

12. **மயில்**

அ) பெண்பால் ஆ) உயர்திணை இ) ஒன்றன்பால் ஈ) பலவின்பால்

**உ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

13. அ) பால் என்பதற்கு பகுப்பு அல்லது பிரிவு என்று பொருள்.
ஆ) திணை என்பதற்கு பகுப்பு அல்லது பிரிவு என்று பொருள்.
இ) எண் என்பதற்கு பகுப்பு அல்லது பிரிவு என்று பொருள்.
ஈ) இடம் என்பதற்கு பகுப்பு அல்லது பிரிவு என்று பொருள்.

14. அ) பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது தன்மை இடம் ஆகும்.
ஆ) பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது முன்னிலை இடம் ஆகும்.
இ) பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது படர்க்கை இடம் ஆகும்.
ஈ) பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது பன்மை எண் ஆகும்.

15. அ) அஃறிணையில் ஒருமைக்குரிய பால் ஆண்பால் ஆகும்.
ஆ) அஃறிணையில் ஒருமைக்குரிய பால் ஒன்றன்பால் ஆகும்.
இ) அஃறிணையில் ஒருமைக்குரிய பால் பலர்பால் ஆகும்.
ஈ) அஃறிணையில் ஒருமைக்குரிய பால் பலவின்பால் ஆகும்.

- உடல்நலமின்மையால் பள்ளிக்கு வர இயலாமை அல்லது சகோதரியின் திருமணம் காரணமாக பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

- நீ விரும்பும் பறவை அல்லது விலங்கு குறித்து கட்டுரை எழுதுக.

**பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மனங்கவரும் இயற்கை எழில் மிக்க இடமே குற்றாலம். இதனைக்'குளிர் தூங்கும் குற்றாலம்' என்று கூறுவார்கள். எங்கு பார்த்தாலும் பசுமையும் செழுமையும் மிக்க குற்றாலத்தை நாடி மக்கள் வருகின்றனர். இங்கு பேரருவி, சிற்றருவி, ஐந்தருவி, செண்பக அருவி, புலி அருவி, பழத்தோட்ட அருவி போன்ற அருவிகள் உள்ளன. மிக உயரத்திலிருந்து தேனருவி விழுகின்றது. குற்றாலத்தில் குற்றால நாதர் கோவில் உள்ளது. இது பாடல் பெற்ற திருத்தலமாகும். 'குற்றால குறவஞ்சி' என்னும் நூல் குற்றாலத்தின் பெருமைகளைப் பாடுகிறது. அருவிகளில் மூலிகைகள் கலந்து நீர் விழுவதால், இதில் குளிக்கும்போது உடல்நலமும், மனநலமும் கிடைக்கிறது.

வினாக்கள் :-

1.குற்றாலத்தில் உள்ள அருவிகள் யாவை?

2.குற்றாலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

3.மிக உயரத்திலிருந்து விழும் அருவி எது?

4.குற்றாலத்தின் பெருமைகளைக் கூறும் நூலின் பெயர் என்ன?

5.குற்றால அருவிகளில் குளிப்பதால் பெறும் நன்மைகள் யாவை? ஏன்?

**முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குப்படுத்திப் பத்தியாக்குக.**

1 கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.

2 சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927 ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.

3 தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கினார்.

4 இவரின் இயற்பெயர் முத்தையா.

5 இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

6 இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமுகப்பிரியா எனப் புனைப்பெயர்கள் பல உண்டு.

**********